தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் இல: RDD/PR/2010/03 (A-05)

பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
அ.பெ. 590
இல.30 சனாதிபதி மாவத்தை
கொழும்பு - 01
2020.06.30

சேரல்: அனைத்துப் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கும்

**சுபீட்ச கடன் திட்டத்திற்கான (சௌபாக்யா) தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கான திருத்தம்**
**துணைக் கடன்களுக்குப் பிரயோகிக்கத்தக்க வட்டி வீதத்தின் குறைப்பு**

இது, சுபீட்ச கடன் திட்டம் (சௌபாக்யா) தொடர்பாக இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளரினால் விடுக்கப்பட்ட 2010.03.22ஆம் திகதியிடப்பட்ட (திருத்தப்பட்டவாறான) இல. ஆர்டிடி/பிஆர்/2010/03 கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் தொடர்பானதாகும்.

சந்தையில் வட்டி வீதங்கள் குறைவடைந்துள்ளமையினைப் பரிசீலனையில் கொண்டு, இலங்கை மத்திய வங்கி 2010.03.22ஆம் திகதியிடப்பட்ட இல.ஆர்டிடி/பிஆர்/2010/03 கொண்ட (திருத்தப்பட்டவாறான) தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் பிரிவு 3.6 மற்றும் 3.7 இனைப் பின்வருமாறு திருத்துவதற்குத் தீர்மானித்திருக்கிறது.

| | | | |
|---|---|---|---|
| 3.6 | 3.6.1 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கான மீள்நிதியிடல் கடன்கள் மீதான வட்டி வீதம் | : | ஆண்டிற்கு 3 சதவீதம் |
| | 3.6.2 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கான வட்டி எல்லை | : | ஆண்டிற்கு 3 சதவீதம் |
| 3.7 | துணைக் கடன்களுக்கான வட்டி வீதம் | : | ஆண்டிற்கு 6 சதவீதம் |

தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் மற்றைய கிளைவாசகங்கள் மாற்றமின்றியிருக்கும்.

இத்திருத்தங்கள் 2020 யூலை 01ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும்.

தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கான இத்திருத்தத்தின் உள்ளடக்கத்தினை தயவுசெய்து தங்கள் வங்கியின் தொடர்பான திணைக்களங்கள்/ கிளைகளிலுள்ள அலுவலர்களது கவனத்திற்குக் கொண்டு வரவும்.

உங்கள் உண்மையுள்ள

**எம்.எஸ்.கே தர்மவர்தன**
**பணிப்பாளர்/ பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்**
**இலங்கை மத்திய வங்கி**